முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

அ.வ.எண். 137/2016

| | | |
|---|---|---|
| பிரதிவாதிகள் தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | பிரபு |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | ஸ்ரீராமுலு |
| வயது | .. | 33 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | புளியரம்பாக்கம் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 07ஆம் நாள் திங்கட்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

விநாயக மூர்த்தி என்பவர் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்து வீட்டுமனை என்றால் சரிதான். அதனுடைய அளவு 240 ச.மீ கொண்ட வீட்டுமனையாகும். மேலும் அதன் சர்வே எண். 137/2பி. மேற்படி சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான் எனது தாத்தா உடையது. முதலில் இந்த சொத்து அயிலு மற்றும் லட்சுமணன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அயிலு என்பவரின் மகன்கள் கோவிந்தசாமி மற்றும் ரங்கநாதன். லட்சுமணன் என்பவர் வாதியின் தந்தை என்றால் சரிதான். என் அப்பாவுடைய அப்பா கோவிந்தசாமி (3ம் பிரதிவாதி). இந்த வழக்கு நடைபெறும்போது இறந்துவிட்டதால் எங்களை வாரிசுகளாக சேர்த்துள்ளனர் என்றால் சரிதான். அயிலு என்பவருக்கு 2 மகன்கள் என்றும் அவர்களுக்கு 1/2 பாகம் என்றும் அதேபோல 1ம் பிரதிவாதியின் வாரிசுகளுக்கு 1/2 பாகம் கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மொத்தம் 3 பாகங்கள் கிடைக்கும்.

காரணம் கோவிந்தசாமி, ரங்கநாதன் மற்றும் லட்சமணன் ஆகியோர்கள் என்னுடைய தாத்தா என்பதால் தான். கோவிந்தசாமி தன்னுடைய தம்பிக்கு தன்னுடைய பங்கை எழுதிக்கொடுத்துள்ளார் ஆனால் ஆண்டு தெரியவில்லை. அதில் 1/3 பாகம் என சொல்லி எழுதிக்கொடுத்துள்ளார். 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் கூட்டாக பட்டாவாக உள்ளது என்பதால் அவ்வாறு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் லட்சுமணனுக்கு 1/2 பாகமும், 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் அயிலு என்பவருக்கு 1/2 பாகமும், அயிலு இறப்பிற்கு பிறகு அவருடைய வாரிசுகள் என்ற அடிப்படையில் 2,3 பிரதிவாதிகள் பட்டாவில் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளதை நான் 1/3 பாகம் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் அவர்களுடைய இடத்தில் வீடுகட்டியுள்ளார்கள், 2ம் பிரதிவாதி ரங்கநாதன் மகன்கள் பின்பகுதியில் வீடுகட்டியுள்ளார்கள். 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்தபோதே வாதிகளுக்கு அவர்களுக்குரிய பாகத்தை செட்டில்மெண்ட் மூலம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலம் 7வது பாராவில் தாவா சொத்தில் 1/3 பாகத்தினை அனுபவித்து வருகிறேன் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. அதனால் வாதிகள் கேட்டுள்ளபடி வாதிகளுக்க 1/2 பாகம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.